# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. MC 14 /2023

Petitioner Witness 2

| | | | |
|---|---|---|---|
| Name | : சுமதி | Caste | : |
| Father's Name/ Husband's Name | : த/பெ. | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of March 2025.

(Petitioner present. Both side advocates present)

(Respondent absent. Petition u/s. 317 Crpc filed and allowed. Accused advocate present)

முதல் விசாரணை :

1. நான் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். படித்துப்பார்த்துதான் கையொப்பம் செய்தேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை என உறுதி கூறுகிறேன். எனது தரப்பில் எனது ஆதார் கார்டு தாக்கல் செய்கிறேன். எனது ஆதார் கார்டு அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **மசாஆ 5** ஆகும்.

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

1. மனுதாரர் எனக்கு தந்தை ஆவார். எனக்கு 2008 ம் வருடம் திருமணம் ஆனது. என் கணவரின் ஊர் காளியாபுரம் ஆகும். என் தங்கைக்கு எனக்கு முன்பே 2005 ம் வருடம் திருமணமானது. நான் வேலை பார்த்த இடத்தில் எனக்கு அக்ரீமென்ட் காலம் முடிவடையாததால் எனது திருமண பேச்சை தள்ளிப்போட்டேன். அச்சமயம் என் தங்கைக்கு வரன் வந்ததால் அவருக்கு திருமணம் செய்ய சொன்னேன். என் குடும்பத்தில் வறுமை இல்லை.

2. என் தந்தை அச்சமயம் பேக்கரியில் டீ மாஸ்டராக இருந்தார். என் தங்கையின் திருமணம் நடந்த 2005 ம் வருடம் 7 பவுன் தங்க நகை சீர் வரிசையாக கொடுத்ததாக கூறியுள்ள பட்சத்தில் மேற்படி நகைகளின் ரசீது தாக்கல் செய்யப்பட்டுள்ளனவா என்றால் பல வருடங்கள் ஆனதால் மேற்படி ரசீது எங்கள் வசம் இல்லை. திருமண புகைப்படங்களில் மனுதாரர் மேற்படி 7 பவுன் தங்க நகைகளை அணிந்திருப்பதாக காணப்படவில்லை என்றால் சரிதான் திருமண சமயத்தில் எதிர்மனுதாரரின் குணம் எத்தகையது என்று தெரிந்துகொள்வதற்காக அச்சமயத்தில் நகைகளை அணிவிக்கவில்லை.

3. திருமண சமயத்தில் தொகை ரூபாய 1.5 லட்சம் தரப்படவில்லை என்றால் சரிதான். என் தங்கைக்கு 7 பவுன் நங்க நகைகளும் ரூபாய் 1.5 லட்சம் சீர் வரிசையாக தருவதற்கு எங்கள் குடும்பத்தில் வசதி இல்லை என்றால் சரியல்ல, எதிர்மனுதாரர்தான் திருமண செலவை செய்தார் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க வழக்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d M.A. Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.